www.Padasalai.Net www.Trb Tnpsc.Com




# SURA'S Q-BANKS


## 10th STANDARD




### Rate Card





SG 357 - ₹ 60/-





SG 358 - ₹ 60/-





SG 359 - ₹ 54/-





SG 360 - ₹ 54/-





SG 361 - ₹ 54/-




SG 362 - ₹ 54/-





SG 363 - ₹ 54/-




SG 364 - ₹54/-

ஆசிரியர்களின் நம்பிக்கை !

மாணவர்களின் எதிர்காலம் !!



For Orders Contact: 81242 01000 / 81243 01000 / 96001 75757

Order through WhatsApp 8124201000 / 98409 26027

Buy online @ surabooks.com Flipkart amazon

Write Your Remarks to :


**SURA PUBLICATIONS**

1620, J Block, 16th Main Road, Anna Nagar West, Chennai - 600040.

Email : enquiry@surabooks.com orders@surabooks.com Website : www.surabooks.com


Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.surabooks.com

சுராவின்

# தமிழ்

# வினா–வங்கி

## வினாத்தாள்கள்

வகுப்பு

**10**

ஒரு மதிப்பெண் வினாக்கள் விடைகளுடன்

### சிறப்பம்சங்கள்

- அரசுத் தேர்வு வினாத்தாள்கள்
- PTA மாதிரி வினாத்தாள்கள்
- சுராவின் மாதிரி வினாத்தாள்கள்

சுரா பப்ளிகேஷன்ஸ்
சென்னை

For Orders Contact
80562 94222 / 81242 01000 / 81243 01000/96001 75757 / 78718 02000/ 98409 26027



enquiry@surabooks.com Ph:8124201000 / 8124301000
Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

© Reserved with Publishers

Code No. : SG 357

**Head Office:**

**Sura Publications**

1620, 'J' Block, 16th Main Road,
Anna Nagar, **Chennai - 600 040.**
**Phone** : 044-4862 9977, 486 27755
**Mobile** : 81242 01000 / 81243 01000
**Whatsapp**: 81242 01000
**E-mail** : orders@surabooks.com
**Website** : www.surabooks.com

**For Orders Contact**

80562 94222
81242 01000
81243 01000
96001 75757
78718 02000
98409 26027

**For More Information - Contact**

Doubts in Our Guides : enquiry@surabooks.com
For Order : orders@surabooks.com
Contact : 81242 01000 / 81243 01000
Whatsapp : 81242 01000 / 98409 26027
**Online Site** : **www.surabooks.com**

For Free Study Materials Visit **http://tnkalvi.in**

**Our Guides for XI, XII Standard**

- சுராவின் தமிழ் உரைநூல்
- Sura's Smart English Guide
- Sura's Compact English Guide
- Sura's Mathematics (EM/TM )
- Sura's Physics (EM/TM)
- Sura's Chemistry (EM/TM)
- Sura's Bio-Botany & Botany (EM/ TM) (Short version & Long Version)
- Sura's Bio-Zoology & Zoology (EM/ TM) (Short version & Long Version)
- Sura's Computer Science (EM/TM)
- Sura's Computer Application (EM / TM)
- Sura's Commerce (EM/TM)
- Sura's Economics (EM/TM)
- Sura's Accountancy (EM/TM)
- Sura's Business Mathematics (EM)
- Sura's 6-in-1 Question Bank (EM)

15/07/2024

## பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| 1. | அரசு வினாத்தாள்கள் - 1 to 7 | 3 - 30 |
| 2. | PTA மாதிரி வினாத்தாள்கள் - 1 to 6 | 31 - 60 |
| 3. | சுராவின் மாதிரி வினாத்தாள்கள் - 1 to 8 | 61 - 95 |
| 4. | ஒரு மதிப்பெண் விடைகள் | 96 |

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com
www.surabooks.com

# உடனடித்தேர்வு - ஜூலை - 2024
## 10ஆம் வகுப்பு - தமிழ்

கால அளவு : 3.00 மணி நேரம் ] **பகுதி I** [ மொத்த மதிப்பெண்கள் : 100

**பகுதி - I (மதிப்பெண்கள் : 15)**

**குறிப்பு :**

**(i) அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.**

**(ii) கொடுக்கப்பட்ட மாற்று விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.** [15 × 1 = 15]

1. வேர்க்கடலை, மிளகாய்விதை, மாங்கொட்டை ஆகியவற்றைக் குறிக்கும் பயிர் வகை :
   அ) குலை வகை ஆ) மணி வகை
   இ) கொழுந்து வகை ஈ) இலை வகை
2. போரில் வெற்றி பெற்ற மன்னன் சூடிக்கொள்ளும் பூவைத் தேர்க.
   அ) கரந்தைப் பூ ஆ) வாகைப் பூ
   இ) தும்பைப் பூ ஈ) நொச்சிப் பூ
3. "அருளைப் பெருக்கி அறிவைத் திருத்தி
   மருளை அகற்றி மதிக்கும் தெருளை" – என்று இவ்வடிகளில் குறிப்பிடப்படுவது எது ?
   அ) தமிழ் ஆ) அறிவியல்
   இ) கல்வி ஈ) இலக்கியம்
4. குளிர் காலத்தைப் பொழுதாகக் கொண்ட நிலங்கள் ..........
   அ) முல்லை, குறிஞ்சி, மருத நிலங்கள் ஆ) குறிஞ்சி, பாலை, நெய்தல் நிலங்கள்
   இ) குறிஞ்சி, மருதம், நெய்தல் நிலங்கள் ஈ) மருதம், நெய்தல், பாலை நிலங்கள்
5. சுதந்திர இந்தியாவின் மகத்தான சாதனையும், சவாலுமாக ஜெயகாந்தன் கருதுவது :
   அ) அரசின் நலத்திட்டங்களைச் செயல்படுத்துதல்
   ஆ) பெற்ற சுதந்திரத்தைப் பேணிக் காத்தல்
   இ) அறிவியல் முன்னேற்றம் ஈ) வெளிநாட்டு முதலீடுகள்
6. காலக்கணிதம் கவிதையில் இடம்பெற்ற தொடர் ........... .
   அ) இகழ்ந்தால் என்மனம் இறந்துவிடாது. ஆ) என்மனம் இகழ்ந்தால் இறந்துவிடாது.
   இ) இகழ்ந்தால் இறந்துவிடாது என்மனம். ஈ) என்மனம் இறந்துவிடாது இகழ்ந்தால்.
7. பின்வருவனவற்றுள் முறையான தொடர் :
   அ) தமிழர் பண்பாட்டில் தனித்த வாழை இலைக்கு இடமுண்டு.
   ஆ) தமிழர் வாழை இலைக்குப் பண்பாட்டில் தனித்த இடமுண்டு.
   இ) தமிழர் பண்பாட்டில் வாழை இலைக்குத் தனித்த இடமுண்டு.
   ஈ) தமிழர் வாழை பண்பாட்டில் தனித்த இலைக்கு இடமுண்டு.
8. 'கானடை' என்பதைப் பிரித்தால் வரும் சரியான பொருளைத் தேர்க.
   அ) காவலுக்குச் செல்லுதல் ஆ) காட்டைச் சேர்தல்
   இ) காலை ஊன்றுதல் ஈ) காத்து இருத்தல்
9. இமைகளை மூடியபடி எழுதும் ஆற்றலைக் கற்றுக் கொண்டவர் .................. .
   அ) தமிழழகனார் ஆ) அப்பாத்துரையார்
   இ) தேவநேயப் பாவாணர் ஈ) இரா.இளங்குமரனார்
10. நாலெழுத்தில் கண்சிமிட்டும் –
    கடையிரண்டில் நீந்திச் செல்லும். இப்புதிருக்கான விடையைத் தேர்க.
    அ) விண்மீன் ஆ) நறுமணம் இ) புதுமை ஈ) காற்று



enquiry@surabooks.com Ph:8124201000 / 8124301000
Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

www.surabooks.com



**11.** கரகாட்டத்தைக் கும்பாட்டம் என்றும் குடக்கூத்து என்றும் கூறுவர். இத்தொடருக்கான வினா எது?
அ) கரகாட்டம் என்றால் என்ன?
ஆ) கரகாட்டம் எக்காலங்களில் நடைபெறும்?
இ) கரகாட்டத்தின் வேறு வேறு வடிவங்கள் யாவை?
ஈ) கரகாட்டத்தின் வேறு பெயர்கள் யாவை?

**பாடலைப் படித்து பின்வரும் வினாக்களுக்கு (12, 13, 14, 15) விடை தருக.**

"விசும்பில் ஊழி ஊழ் ஊழ் செல்லக்
கரு வளர் வானத்து இசையில் தோன்றி,
உரு அறிவாரா ஒன்றன் ஊழியும்;
உந்து வளி கிளர்ந்த ஊழி ஊழ் ஊழியும்"

**12.** பாடலில் இடம்பெற்றுள்ள மோனைச் சொற்களைத் தேர்ந்தெடுக்க.
அ) கரு வளர் – வானத்து ஆ) ஊழி – ஊழ்
இ) விசும்பில் – கிளர்ந்த ஈ) இசையில் – ஊழியும்

**13.** இப்பாடல் இடம்பெற்ற நூல் ................ .
அ) முல்லைப்பாட்டு ஆ) பரிபாடல்
இ) நீதிவெண்பா ஈ) திருக்குறள்

**14.** இப்பாடலின் ஆசிரியர் .................
அ) நப்பூதனார் ஆ) பூதஞ்சேந்தனார்
இ) கீரந்தையார் ஈ) குலசேகராழ்வார்

**15.** விசும்பு, இசை, ஊழி – பாடலில் இச்சொற்கள் உணர்த்தும் பொருள்கள் முறையே ................ .
அ) காற்று, முறை, கடல் ஆ) மேகம், இடி, ஆழம்
இ) வானம், பேரொலி, யுகம் ஈ) வானம், காற்று, காலம்

## பகுதி - II (மதிப்பெண்கள் : 18) பிரிவு - 1

**குறிப்பு : எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும். 21–வது வினாவிற்குக் கட்டாயமாக விடையளிக்கவும்.** [4 × 2 = 8]

**16.** விடைகளுக்கேற்ற வினாக்கள் அமைக்க
(அ) சாலைகளில் இடப்பக்கம் வண்டிகள் செல்வதே சாலை விதிகளில் முதன்மையான விதி.
(ஆ) ம.பொ.சி. சொற்பொழிவுகளைக் கேட்பதன் மூலமாக இலக்கிய அறிவு பெற்றார்.

**17.** ''மன்னுஞ் சிலம்பே! மணிமே கலைவடிவே!
முன்னும் நினைவால் முடிதாழ வாழ்த்துவமே!''
– இவ்வடிகளில் இடம்பெற்றுள்ள காப்பியங்களைத் தவிர எஞ்சியுள்ள ஐம்பெருங்காப்பியங்களின் பெயர்களை எழுதுக.

**18.** பாசவர், வாசவர், பல்நிண விலைஞர், உமணர் – சிலப்பதிகாரம் காட்டும் இவ்வணிகர்கள் யாவர்?

**19.** வறுமையின் காரணமாக உதவிகேட்டு வருபவரின் தன்மானத்தை எள்ளி நகையாடுவது குறித்துக் குறளின் கருத்து என்ன?

**20.** வருங்காலத்தில் தேவையெனக் கருதுகின்ற செயற்கை நுண்ணறிவு பொதிந்த இரண்டு அறிவியல் கண்டுபிடிப்புகளைக் குறிப்பிடுக.

**21.** "எப்பொருள்'' எனத் தொடங்கும் திருக்குறளை எழுதுக.

## பிரிவு - 2

**குறிப்பு : எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்.** [5 × 2 = 10]

**22.** உவமையைப் பயன்படுத்திச் சொற்றொடர் உருவாக்குக.
(அ) தாமரை இலை நீர்போல (ஆ) சிலை மேல் எழுத்து போல

**23.** பகுபத உறுப்பிலக்கணம் தருக. பொறித்த

**24.** தஞ்சம் எளியர் பகைக்கு – இவ்வடிக்குரிய அசைகளையும் வாய்ப்பாடுகளையும் எழுதுக.

**25.** கலைச்சொல் தருக. அ) Emblem ஆ) Belief

enquiry@surabooks.com Ph:8124201000 / 8124301000

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

www.surabooks.com



26. எதிர்மறையாக மாற்றுக. (அ) மீளாத் துயர் (ஆ) எழுதாக் கவிதை

27. குறள்வெண்பாவின் இலக்கணத்தை எழுதுக.

28. புறத்திணைகளில் எதிரெதிர்த் திணைகளை அட்டவணைப்படுத்துக.

**பகுதி - III (மதிப்பெண்கள் : 18) பிரிவு - 1**

**குறிப்பு : எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்கவும்.** [2 × 3 = 6]

29. உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.

ஜுன் முதல் செப்டம்பர் வரை தென்மேற்குப் பருவக் காற்றாகவும் அக்டோபர் முதல் டிசம்பர் வரை வடகிழக்குப் பருவக்காற்றாகவும் வீசுகிறேன். இவ்வாறாக மழைப் பொழிவைத் தருகின்றேன். இந்தியாவின் முதுகெலும்பு வேளாண்மைதானே! இவ்வேளாண்மை சிறப்பதிலும் நாடு தன்னிறைவு பெறுவதிலும் நான் பங்கெடுக்கின்றேன். இந்தியாவிற்குத் தேவையான எழுபது விழுக்காடு மழையளவினைத் தென்மேற்குப் பருவக்காற்றாகக் கொடுக்கின்றேன்.

**வினாக்கள் :**

அ) இந்தியாவின் முதுகெலும்பு எது?

ஆ) வடகிழக்குப் பருவக்காற்று வீசும் காலம் எது?

இ) இந்தியாவிற்கு தென்மேற்குப் பருவக்காற்று கொடுக்கும் மழையின் அளவு யாது?

30. சங்க இலக்கியங்கள் காட்டும் அறங்கள் இன்றைக்கும் தேவையானவையே என்பதற்குச் சில எடுத்துக்காட்டுகள் தருக.

31. 'புளியங்கன்று ஆழமாக நடப்பட்டுள்ளது'.
இதுபோல் இளம் பயிர் வகை ஐந்தின் பெயர்களைத் தொடரில் அமைக்க.

**பிரிவு - 2**

**குறிப்பு : எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும். 34–ஆவது கட்டாயமாக விடையளிக்க வேண்டும்.** [2 × 3 = 6]

32. மன்னன் இடைக்காடனார் என்ற புலவனுக்குச் சிறப்புச் செய்தது ஏன்?

33. 'முதல்மழை விழுந்ததும்' என்னவெல்லாம் நிகழ்வதாக கு.ப.ரா. கவிபாடுகிறார்?

34. அ) 'அன்னை மொழியே' – எனத் தொடங்கி 'பேரரசே' என முடியும் பெருஞ்சித்திரனாரின் பாடலை எழுதுக.

**அல்லது**

ஆ) "நவமணி" எனத்தொடங்கும் தேம்பாவணிப் பாடலை எழுதுக.

**பிரிவு - 3**

**குறிப்பு : எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்கவும்.** [2 × 3 = 6]

35. அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது.
– இக்குறளில் பயின்றுவரும் அணியை விளக்கி எழுதுக.

36. தோட்டத்தில் மல்லிகைப்பூ பறித்த பூங்கொடி, வரும் வழியில் ஆடுமாடுகளுக்குத் தண்ணீர்த் தொட்டியில் குடிநீர் நிரப்பினாள். வீட்டினுள் வந்தவள் சுவர்க்கடிகாரத்தில் மணி பார்த்தாள். இப்பத்தியிலுள்ள தொகைநிலைத் தொடர்களின் வகைகளை எழுதுக.

37. கருவியும் காலமும் செய்கையும் செய்யும்
அருவினையும் மாண்ட தமைச்சு.
– இக்குறட்பாவினை அலகிட்டு வாய்பாடு காண்க.

**பகுதி - IV (மதிப்பெண்கள் : 25)**

**குறிப்பு : அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.**

[5 × 5 = 25]

38. அ) வள்ளுவம், சிறந்த அமைச்சருக்குக் கூறிய இலக்கணங்கள் நமக்கும் பொருந்துவதைக் குறள்வழி விளக்குக. **அல்லது**

ஆ) சிலப்பதிகார மருவூர்ப்பாக்க வணிக வீதிகளை இக்கால வணிக வளாகங்களோடும், அங்காடிகளோடும் ஒப்பிட்டு எழுதுக.

www.surabooks.com

enquiry@surabooks.com Ph:8124201000 / 8124301000

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

www.surabooks.com




39. அ) பள்ளித்திடலில் கிடைத்த பணப்பையை உரியவரிடம் ஒப்படைத்ததையும், அதற்குப் பாராட்டுப் பெற்றதையும் பற்றி வெளியூரில் இருக்கும் உறவினர் ஒருவருக்குக் கடிதம் எழுதுக.

**அல்லது**

ஆ) உங்கள் பகுதியில் ஏற்பட்ட கடும்புயலில் சாய்ந்துவிட்ட மரங்களை அகற்றியும், பழுது அடைந்த சாலைகளைச் சீரமைத்தும், மின் கம்பங்களைச் சரிசெய்தும் தருமாறு மாநகராட்சி ஆணையருக்குக் கடிதம் எழுதுக.

40. காட்சியை கண்டு கவினுற எழுதுக.



41. குமார் தன் தந்தை செழியன் அவர்களிடம் நூலகத்தில் உறுப்பினராக வேண்டினான். அவரும் குமாரிடம் 500 ரூபாயும், 12 எழில்நகர், பாரதி தெரு, நாமக்கல் மாவட்டம் என்ற முகவரியிட்ட அடையாளச் சான்றையும் கொடுத்தார். கிளை நூலகத்திற்குச் சென்ற குமாராக தேர்வர் தன்னைக் கருதி, கொடுக்கப்பட்ட நூலக உறுப்பினர் படிவத்தை நிரப்புக.

42. அ) இன்சொல் பேசுவதால் விளையும் நன்மைகள் மற்றும் தீயசொல் பேசுவதால் ஏற்படும் தீமைகளைப் பட்டியலிடுக.

**அல்லது**

ஆ) மொழிபெயர்க்க :

The Golden sun gets up early in the morning and starts its bright rays to fade away the dark. The milky clouds start their wandering. The colourful birds start twitting their morning melodies in percussion. The cute butterflies dance around the flowers. The flowers fragrance fills the breeze. The breeze gently blows everywhere and makes everything pleasant.

## பகுதி - V (மதிப்பெண்கள் : 24)

**குறிப்பு : அனைத்து வினாக்களுக்கும் விரிவான விடையளிக்கவும்.** [3 × 8 = 24]

43. அ) தமிழின் சொல்வளம் பற்றியும் புதிய சொல்லாக்கத்திற்கான தேவை குறித்தும் தமிழ் மன்றத்தில் பேசுவதற்கான உரைக் குறிப்புகளை எழுதுக.

**அல்லது**

ஆ) ஜெயகாந்தன் நினைவுச் சிறப்பிதழை, வார இதழ் ஒன்று வெளியிட இருக்கிறது. அதற்கான ஒரு சுவரொட்டியை வடிவமைக்கவும்.

44. அ) ‘அன்னமய்யா’ என்னும் பெயருக்கும் அவரின் செயலுக்கும் உள்ள பொருத்தப் பாட்டினைக் ‘கோபல்லபுரத்து மக்கள்’ கதைப்பகுதி கொண்டு விவரிக்க.

**அல்லது**

ஆ) “பாய்ச்சல்’’ சிறு கதையில் அழகுவின் கதாப்பாத்திரம் போல், நீங்கள் கண்டு மகிழ்ந்த பகல்வேடக் கலைஞர் குறித்த நிகழ்வுகளை ஒப்பிட்டும் அவர்கள் எதிர்கொள்ளும் இடர்பாடுகள் குறித்தும் விரிவாக எழுதுக.

45. அ) முன்னுரை – விசும்பின் துளியும் பசும்புல் தலையும் – காற்று மாசு – பசுமையைக் காப்போம் – மரம் நமக்கு வரம் – நில மாசு – மழைநீர் உயிர்நீர் –நீர் மாசு – முடிவுரை இக்குறிப்புகளைப் பயன்படுத்தி ‘இயற்கையைக் காப்போம்’ என்னும் தலைப்பில் கட்டுரை எழுதுக.

**அல்லது**

ஆ) குறிப்புகளைப் பயன்படுத்திக் கட்டுரை எழுதி, பொருத்தமான தலைப்பிடுக.

**குறிப்புகள் :** முன்னுரை – அறிவியல் கண்டுபிடிப்புகள் – வாழ்வை மேம்படுத்தும் அறிவியல் – எதிர்காலத் தொழில்நுட்பம் – மனிதனைக் கட்டுப்படுத்தும் அறிவியல் – முடிவுரை.

◆◆◆

enquiry@surabooks.com Ph:8124201000 / 8124301000

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com
www.surabooks.com



# அரசு பொதுத் தேர்வு மார்ச் - 2024
## 10ஆம் வகுப்பு - தமிழ்

**கால அளவு : 3.00 மணி நேரம் ] பகுதி I [ மொத்த மதிப்பெண்கள் : 100**

**பகுதி - I (மதிப்பெண்கள் : 15)**

**குறிப்பு :** (i) **அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.**
(ii) **கொடுக்கப்பட்டுள்ள மாற்று விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.** [15 × 1 = 15]

1. கேட்டவர் மகிழப் பாடிய பாடல் இது' – இத்தொடரில் இடம்பெற்றுள்ள தொழிற்பெயரும் வினையாலணையும் பெயரும் முறையே :
அ) பாடிய; கேட்டவர் ஆ) பாடல்; பாடிய
இ) கேட்டவர்; பாடிய ஈ) பாடல்; கேட்டவர்

2. 'மலர்க்கை' – தொகையின் வகையைத் தேர்க.
அ) பண்புத் தொகை ஆ) உவமைத் தொகை
இ) அன்மொழித் தொகை ஈ) உம்மைத் தொகை

3. பரிபாடல் அடியில் 'விசும்பும் இசையும்' என்னும் தொடர் எதனைக் குறிக்கிறது ?
அ) வானத்தையும் பாட்டையும் ஆ) வானத்தையும் புகழையும்
இ) வானத்தையும் பூமியையும் ஈ) வானத்தையும் பேரொலியையும்

4. தாளாண்மை என்னும் தகைமைக்கண் தங்கிற்றே
வேளாண்மை என்னும் செருக்கு. –இக்குறட்பாவில் இடம்பெறும் அடி எதுகைச் சொற்களைத் தேர்க.
அ) தாளாண்மை – தகைமைக்கண் ஆ) தாளாண்மை – வேளாண்மை
இ) தகைமைக்கண் – தங்கிற்றே ஈ) வேளாண்மை – செருக்கு

5. "இங்கு நகரப் பேருந்து நிற்குமா ?'' என்று வழிப்போக்கர் கேட்டது .............வினா.
''அதோ, அங்கே நிற்கும்.'' என்று மற்றொருவர் கூறியது ....... விடை.
அ) ஐய வினா, வினா எதிர்வினாதல் ஆ) அறி வினா, மறை விடை
இ) அறியா வினா, சுட்டு விடை ஈ) கொளல் வினா, இனமொழி விடை

6. 'குழந்தை வந்தது' என்ற எழுவாய்த் தொடரின் விளித் தொடரை தேர்க.
அ) குழந்தையுடன் வா ஆ) வந்த குழந்தை
இ) குழந்தையே வா ! ஈ) குழந்தை வந்தது

7. குளிர்காலத்தைப் பொழுதாகக் கொண்ட நிலங்களைத் தேர்க.
அ) முல்லை, குறிஞ்சி, மருத நிலங்கள் ஆ) குறிஞ்சி, பாலை, நெய்தல் நிலங்கள்
இ) குறிஞ்சி, மருதம், நெய்தல் நிலங்கள் ஈ) மருதம், நெய்தல், பாலை நிலங்கள்

8. மேன்மை தரும் அறம் என்பது ...................
அ) கைமாறு கருதாமல் அறம் செய்வது
ஆ) மறுபிறப்பில் பயன் பெறலாம் என்ற நோக்கில் அறம் செய்வது
இ) புகழ்கருதி அறம் செய்வது ஈ) பதிலுதவி பெறுவதற்காக அறம் செய்வது.

9. காசிக்கண்டம் என்பது :
அ) காசி நகரத்தின் வரலாற்றைப் பாடும் நூல்
ஆ) காசி நகரத்தைக் குறிக்கும் மறுபெயர்
இ) காசி நகரத்தின் பெருமையைப் பாடும் நூல்
ஈ) காசி நகரத்திற்கு வழிப்படுத்தும் நூல்

10. 'மாபாரதம் தமிழ்ப்படுத்தும் மதுராபுரிச் சங்கம் வைத்தும்' என்னும் சின்னமனூர்ச் செப்பேட்டுக் குறிப்பு உணர்த்தும் செய்தி.
அ) சங்க காலத்தில் மொழிபெயர்ப்பு இருந்தது.
ஆ) காப்பியக் காலத்தில் மொழிபெயர்ப்பு இருந்தது.
இ) பக்தி இலக்கியக் காலத்தில் மொழிபெயர்ப்பு இருந்தது.
ஈ) சங்கம் மருவிய காலத்தில் மொழிபெயர்ப்பு இருந்தது.

enquiry@surabooks.com Ph:8124201000 / 8124301000
Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

www.surabooks.com



11. உலகத்திலேயே ஒரு மொழிக்காக உலக மாநாடு நடத்திய முதல் நாடு :

அ) சிங்கப்பூர் ஆ) மலேசியா

இ) இந்தியா ஈ) இலங்கை

**பாடலைப் படித்து பின்வரும் வினாக்களுக்கு (12, 13, 14, 15) விடை தருக.**

"நனந்தலை உலகம் வளைஇ நேமியொடு
வலம்புரி பொறித்த மாதாங்கு தடக்கை
நீர்செல, நிமிர்ந்த மாஅல் போல,
பாடுஇமிழ் பனிக்கடல் பருகி, வலன் ஏர்பு,
கோடு கொண்டு எழுந்த கொடுஞ்செலவு எழிலி''

12. பாடல் இடம்பெற்ற நூலைத் தேர்க.

அ) சிலப்பதிகாரம் ஆ) காசிக்காண்டம்

இ) நற்றிணை ஈ) முல்லைப்பாட்டு

13. 'நனந்தலை உலகம்' என்பதன் சரியான பொருளைத் தேர்க.

அ) சிறிய உலகம் ஆ) குளிர்ந்த உலகம்

இ) அகன்ற உலகம் ஈ) வெப்பமான உலகம்

14. 'தடக்கை' – இச்சொல்லின் இலக்கணக் குறிப்பைத் தேர்க.

அ) உரிச்சொல் தொடர் ஆ) பண்புத் தொகை

இ) வினைத் தொகை ஈ) வேற்றுமைத் தொடர்

15. பாடலின் ஆசிரியரைத் தேர்க.

அ) தமிழழகனார் ஆ) நப்பூதனார்

இ) கீரந்தையார் ஈ) இளங்கோவடிகள்

**பகுதி - II (மதிப்பெண்கள் : 18) பிரிவு - 1**

**குறிப்பு : எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும். 21–வது வினாவிற்குக் கட்டாயமாக விடையளிக்கவும்.** [4 × 2 = 8]

16. தற்கால உரைநடையில் சிலேடை அமையும் நயத்திற்கு ஓர் எடுத்துக்காட்டுத் தருக.

17. விடைகளுக்கேற்ற வினாக்கள் அமைக்கவும்.

அ) அறிவியலின் வளர்ச்சி மனிதனின் அறிவை விரிவாக்குகிறது.

ஆ) பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை மலர்வது குறிஞ்சி.

18. வறுமையிலும் படிப்பின் மீது நாட்டம் கொண்டவர் ம.பொ.சி. என்பதற்குச் சான்று தருக.

19. பின்வருவனவற்றுள் கூரான ஆயுதம் எது என்று செந்நாப்போதார் கூறுகிறார் ? ஏன் என்பதை எழுதுக. பெரிய கத்தி, இரும்பு ஈட்டி, உழைத்ததால் கிடைத்த ஊதியம், வில்லும் அம்பும்.

20. செய்குதம்பிப் பாவலரின் கல்வி பற்றிய கருத்தினை முழக்கத் தொடர்களாக எழுதுக.

21. 'முயற்சி' எனத் தொடங்கும் திருக்குறளை எழுதுக.

**பிரிவு - 2**

**குறிப்பு : எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்.** [5 × 2 = 10]

22. ஒரு தாற்றில் பல சீப்பு வாழைப்பழங்கள் உள்ளன.
ஒரு சீப்பில் பல தாறு வாழைப்பழங்கள் உள்ளன.
ஒரு சீப்பில் பல வாழைப்பழங்கள் உள்ளன.
மேற்கண்ட தொடர்களில் சரியான தொடர்களைச் சுட்டிக்காட்டி எஞ்சிய பிழையான தொடரிலுள்ள பிழைக்கான காரணத்தை எழுதுக.

23. இரு சொற்களைப் பயன்படுத்தி ஒரு தொடர் அமைக்கவும்.

அ) கொடு – கோடு ஆ) இயற்கை – செயற்கை

24. பகுபத உறுப்பிலக்கணம் தருக – "மயங்கிய''

25. கலைச் சொற்கள் தருக. அ) Biotechnology ஆ) Myth

26. குறிப்புகளைக் கொண்டு வினாவிலேயே விடை இருப்பதைப் போன்று வினாத் தொடர்கள் அமைக்கவும்.

(1) சுவைக்காத இளநீர் (2) விடுமுறை நாள்

enquiry@surabooks.com Ph:8124201000 / 8124301000

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

www.surabooks.com



27. "சீசர் எப்போதும் என் சொல்பேச்சைக் கேட்பான். புதியவர்களைப் பார்த்துக் கத்துவானே தவிர கடிக்க மாட்டான்'' என்று இளமாறன் தன்னுடைய வளர்ப்பு நாயைப் பற்றிப் பெருமையாகக் கூறினார் – இதில் உள்ள வழுவமைதிகளைத் திருத்தி எழுதுக.

28. 'வேங்கை' என்பதைத் தொடர்மொழியாகவும் பொது மொழியாகவும் வேறுபடுத்திக் காட்டுக.

**பகுதி - III (மதிப்பெண்கள் : 18) பிரிவு - 1**

**குறிப்பு : எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்கவும்.** [2 × 3 = 6]

29. இன்றைய அறிவியல் கண்டுபிடிப்புகள் மனிதனை மேம்படுத்துகின்றனவா என்பது குறித்த சிந்தனைகளை முன்வைத்து எழுதுக.

30. உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.

பருப்பொருள்கள் சிதறும்படியாக பல ஊழிக்காலங்கள் கடந்து சென்றன. புவி உருவானபோது நெருப்புப் பந்து போல் விளங்கிய ஊழிக்காலம் தோன்றியது. பின்னர் புவி குளிரும்படியாகத் தொடர்ந்து மழை பொழிந்த ஊழிக்காலம் கடந்தது. அவ்வாறு தொடர்ந்து பெய்த மழையால் புவி வெள்ளத்தில் மூழ்கியது. இப்படி மீண்டும் மீண்டும் சிறப்பாகிய ஆற்றல் மிகுந்து செறிந்து திரண்டு இப்படியாக (வெள்ளத்தில் மூழ்குதல்) நடந்த இந்தப் பெரிய உலகத்தில், உயிர்கள் வாழ்வதற்கு ஏற்ற சூழலாகிய உள்ளீடு தோன்றியது. உயிர்கள் தோன்றி நிலைபெறும்படியாக இப்பெரிய புவியில் ஊழிக்காலம் கடந்தது.

அ) புவி ஏன் வெள்ளத்தில் மூழ்கியது ?

ஆ) பத்தியில் உள்ள அடுக்குத் தொடர்களை எடுத்து எழுதுக.

இ) பெய்த மழை – வினைத்தொகையாக மாற்றுக.

31. நீங்கள் அறிந்த நிகழ்கலைக் கலைஞர் ஒருவரைப் பற்றியும் அவரது கலைத்திறன் பற்றியும் எழுதுக.

**பிரிவு - 2**

**குறிப்பு : எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும். 34–ஆவது கட்டாயமாக விடையளிக்க வேண்டும்.** [2 × 3 = 6]

32. எவையெல்லாம் அறியேன் என்று கருணையன் கூறுகிறார் ?

33. நெடுநாளாகப் பார்க்க எண்ணியிருந்த உறவினர் ஒருவர் எதிர்பாராத வகையில் உங்கள் வீட்டிற்கு வந்தால் அவரை விருந்தோம்பல் செய்வதைக் குறித்து எழுதுக.

34. அடிபிறழாமல் எழுதுக.

அ) "தென்னன் மகளே' – எனத் தொடங்கி "முடிதாழ வாழ்த்துவமே'' என முடியும் அன்னை மொழியே பாடல்

**அல்லது**

ஆ) "வாளால் அறுத்துச் சுடினும்'' – எனத் தொடங்கும் பெருமாள் திருமொழிப் பாடல்.

**பிரிவு - 3**

**குறிப்பு : எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்கவும்.** [2 × 3 = 6]

35. 'அறிந்தது, அறியாதது, புரிந்தது, புரியாதது, தெரிந்தது, தெரியாதது, பிறந்தது, பிறவாதது' இவை அனைத்தையும் யாம் அறிவோம். அதுபற்றி உமது அறிவுரை எமக்குத் தேவை இல்லை. எல்லாம் எமக்குத் தெரியும். இக்கூற்றில் உள்ள வினைமுற்றுகளைத் தொழிற்பெயர்களாக மாற்றி எழுதுக.

36. பொருளல் லவரைப் பொருளாகச் செய்யும்
பொருளல்ல தில்லை பொருள். – இத்திருக்குறளில் பயின்று வரும் அணியைக் குறிப்பிட்டு விளக்குக.

37. உலகத்தோ டொட்ட வொழுகல் பலகற்றும்
கல்லார் அறிவிலா தார்.'
– இக்குறட்பாவினை அலகிட்டு வாய்பாடு காண்க.

**பகுதி - IV (மதிப்பெண்கள் : 25)**

**குறிப்பு : அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.** [5 × 5 = 25]

38. அ) தமிழர் மருத்துவ முறைக்கும் நவீன மருத்துவ முறைக்கும் உள்ள தொடர்பு குறித்து விவரித்து எழுதுக.

**அல்லது**

ஆ) 'பெரியாரைத் துணைக்கோடல்' என்ற வள்ளுவரின் கூற்றினை விளக்கி, உங்கள் கருத்தை எழுதுக.

39. அ) புதிதாகத் திறன்பேசி வாங்கியிருக்கும் உங்கள் தம்பிக்கு, அதனை முறையாகப் பயன்படுத்தும் வழிமுறைகளை விளக்கி, அறிவுரைகள் கூறிக் கடிதம் ஒன்று எழுதுக.

**அல்லது**

ஆ) நாளிதழ் ஒன்றின் பொங்கல் மலரில் 'உழவுத் தொழிலுக்கு வந்தனை செய்வோம்' என்ற உங்கள் கட்டுரையை வெளியிட வேண்டி, அந்நாளிதழ் ஆசிரியருக்குக் கடிதம் எழுதுக.


enquiry@surabooks.com Ph:8124201000 / 8124301000

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com
www.surabooks.com



40. காட்சியைக் கண்டு கவினுற எழுதுக.



41. தமிழ்வேந்தன் என்பவரின் மகள் வான்மலர் அரசு உயர்நிலைப் பள்ளி, விருத்தாசலம், கடலூர் மாவட்டத்தில் 10–ஆம் வகுப்பு முடித்திருக்கிறார். அதே ஊரில் உள்ள அரசு மேல்நிலைப் பள்ளியில் 11–ஆம் வகுப்ப சேர விரும்புகிறார். தேர்வர் தன்னை வான்மலராகக் கருதி, கொடுக்கப்பட்ட மேல்நிலை வகுப்பு சேர்க்கை விண்ணப்பப் படிவத்தினை நிரப்புக.

42. அ) மாணவ நிலையில் நாம் பின்பற்ற வேண்டிய அறங்களையும் அதனால் ஏற்படும் நன்மைகளையும் அட்டவணைப்படுத்துக.

**அல்லது**

ஆ) மொழிபெயர்க்கவும் :

Therukoothu is, as its name indicates, a popular form of theatre performed in the streets. It is performed by rural artists. The stories are derived from epics like Ramayana, Mahabharatha and other ancient puranas. There are more songs in the play with dialogues improvised by the artists on the spot. Fifteen to twenty actors with a small orchestra forms a koothu troupe. Though the orchestra has a singer, the artists sing in their own voices. Artists dress themselves with heavy costumes and bright makeup. Koothu is very popular among rural areas.

## பகுதி - V (மதிப்பெண்கள் : 24)

**குறிப்பு : அனைத்து வினாக்களுக்கும் விரிவான விடையளிக்கவும்.** [3 × 8 = 24]

43. அ) ஒரு குழந்தையைத் தூக்கவும் கீழே விழுந்த ஒரு தேனீர்க் கோப்பையை எடுக்கவும் மென்பொருள் அக்கறை கொள்ளுமா ? வெறும் வணிகத்துடன் நின்றுவிடுமா ? இக்கருத்துகளை ஒட்டிச் 'செயற்கை நுண்ணறிவின் எதிர்கால வெளிப்பாடுகள்' என்ற தலைப்பில் விவரித்து எழுதுக.

**அல்லது**

ஆ) எவரேனும் ஓர் அறிஞர்/ சான்றோர்/புகழ்பெற்ற சாதனையாளர் வாழ்வில் நடந்த நிகழ்வுகளில் ஒன்றை அவரே சொல்வதைப் போன்று தன் வரலாறாக மாற்றி எழுதுக.

44. அ) அழகிரி சாமியின் 'ஒருவன் இருக்கிறான்' சிறுகதையில் மனிதத்தை வெளிப்படுத்தும் கதை மாந்தர் குறித்து எழுதுக.

**அல்லது**

ஆ) இராமானுஜர் நாடகம் வெளிப்படுத்தும் மனிதநேயத்தினைச் சுவைப்பட விளக்கி எழுதுக.

45. அ) பள்ளி ஆண்டு விழா மலருக்காக, நீங்கள் நூலகத்தில் படித்த கதை/கட்டுரை/சிறுகதை/கவிதை நூலுக்கான மதிப்புரை எழுதுக.

குறிப்பு : நூலின் தலைப்பு – நூலின் மையப்பொருள் – மொழிநடை – வெளிப்படுத்தும் கருத்து – நூலின் நயம் – நூல் கட்டமைப்பு – சிறப்புக் கூறு – நூல் ஆசிரியர்.

**அல்லது**

ஆ) குறிப்புகளைப் பயன்படுத்தி, 'சாலைப் பாதுகாப்பு' என்ற தலைப்பில் கட்டுரை எழுதுக.

**குறிப்புகள்** : முன்னுரை *– சாலை விதிகளை அறிவோம் – ஊர்தி ஓட்டுநருக்கான நெறிகள் – விபத்துகளுக்கான காரணங்கள் – தேவையான விழிப்புணர்வு – நம் கடமை – முடிவுரை.

◆◆◆

enquiry@surabooks.com Ph:8124201000 / 8124301000
Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com
www.surabooks.com

# உடனடித்தேர்வு - ஜூலை - 2023
## 10ஆம் வகுப்பு - தமிழ்

கால அளவு : 3.00 மணி நேரம் ] **பகுதி I** [ மொத்த மதிப்பெண்கள் : 100

**பகுதி - I (மதிப்பெண்கள் : 15)**

**குறிப்பு :**

**(i) அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.**

**(ii) கொடுக்கப்பட்டுள்ள மாற்று விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.** [15 × 1 = 15]

1. 'மெத்த வணிகலன்' என்னும் தொடரில் தமிழழகனார் குறிப்பிடுவது :
அ) வணிகக்கப்பல்களும் ஐம்பெரும் காப்பியங்களும்
ஆ) பெரும் வணிகமும் பெரும் கலன்களும்
இ) ஐம்பெரும் காப்பியங்களும் அணிகலன்களும்
ஈ) வணிகக் கப்பல்களும் அணிகலன்களும்

2. பின்வருவனவற்றுள் முறையான தொடர்
அ) தமிழர் பண்பாட்டில் தனித்த வாழை இலைக்கு இடமுண்டு.
ஆ) தமிழர் வாழை இலைக்குப் பண்பாட்டில் தனித்த இடமுண்டு.
இ) தமிழர் பண்பாட்டில் வாழை இலைக்குத் தனித்த இடமுண்டு.
ஈ) தமிழர் வாழை பண்பாட்டில் தனித்த இலைக்கு இடமுண்டு.

3. 'செங்காந்தள்' – என்ற சொல்லில் அமைந்துள்ள தொகையைத் தேர்க.
அ) உவமைத் தொகை ஆ) பண்புத் தொகை
இ) உம்மைத் தொகை ஈ) வேற்றுமைத் தொகை

4. பரிபாடல் அடியில் 'விசும்பும் இசையும்' என்னும் தொடர் எதனைக் குறிக்கிறது ?
அ) வானத்தையும் பாட்டையும் ஆ) வானத்தையும் புகழையும்
இ) வானத்தையும் பூமியையும் ஈ) வானத்தையும் பேரொலியையும்

5. "அருளைப் பெருக்கி அறிவைத் திருத்தி
மருளை அகற்றி மதிக்கும் தெருளை" – என்று இவ்வடிகளில் குறிப்பிடப்படுவது எது ?
அ) தமிழ் ஆ) அறிவியல் இ) கல்வி ஈ) இலக்கியம்

6. கரகாட்டத்தைக் 'கும்பாட்டம்' என்றும் 'குடக்கூத்து' என்றும் கூறுவர். இத்தொடருக்கான வினா எது ?
அ) கரகாட்டம் என்றால் என்ன ?
ஆ) கரகாட்டம் எக்காலங்களில் நடைபெறும் ?
இ) கரகாட்டத்தின் வேறு வேறு வடிவங்கள் யாவை ?
ஈ) கரகாட்டத்தின் வேறு பெயர்கள் யாவை ?

7. அறிஞருக்கு நூல், அறிஞரது நூல் ஆகிய சொற்றொடர்களில் பொருளை வேறுபடுத்தக் காரணமாக அமைவது
அ) வேற்றுமை உருபு ஆ) எழுவாய்
இ) உவம உருபு ஈ) உரிச்சொல்

8. தமிழினத்தை ஒன்றுபடுத்தும் இலக்கியமாக ம.பொ.சி. கருதியது ..................
அ) திருக்குறள் ஆ) புறநானூறு
இ) கம்பராமாயணம் ஈ) சிலப்பதிகாரம்

9. 'எந்தமிழ்நா' என்பதைப் பிரித்தால் இவ்வாறு வரும்.........
அ) எந் + தமிழ் + நா ஆ) எந்த ++ தமிழ் + நா
இ) எம் + தமிழ் + நா ஈ) எந்தம் + தமிழ் + நா

10. சிலப்பதிகாரத்திலும் மணிமேகலையிலும் அமைந்த பாவினம்
அ) அகவற்பா ஆ) வெண்பா இ) வஞ்சிப்பா ஈ) கலிப்பா

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

www.surabooks.com



# மாதிரி வினாத்தாள் - (PTA - 1)

## 10ஆம் வகுப்பு - தமிழ்

கால அளவு : 3.00 மணி நேரம் ] [ மொத்த மதிப்பெண்கள் : 100

### பகுதி - I (மதிப்பெண்கள் : 15)

**குறிப்பு :**

**(i) அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.**

**(ii) கொடுக்கப்பட்டுள்ள மாற்று விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.** [15 × 1 = 15]

1. “மருந்தே ஆயினும் விருந்தோடு உண்” என்னும் அடிகள் இடம் பெற்றுள்ள நூல்

அ) குறுந்தொகை ஆ) கொன்றைவேந்தன்

இ) திருக்குறள் ஈ) நற்றிணை

2. “மலர்கள் தரையில் நழுவும்” எப்போது ?

அ) அள்ளி முகர்ந்தால் ஆ) தளரப் பிணைத்தால்

இ) இறுக்கி முடிச்சிட்டால் ஈ) காம்பு முறிந்தால்

3. ‘காலம் கரந்த பெயரெச்சம்’ – என்பது –

அ) வினைத்தொகை ஆ) உம்மைத்தொகை

இ) பண்புத்தொகை ஈ) அன்மொழித்தொகை

4. எள்ளிலிருந்து எண்ணெய் எடுத்தலின் மிஞ்சுவதைக் குறிக்கும் சரியான சொல்

அ) எள்கசடு ஆ) பிண்ணாக்கு

இ) ஆமணக்கு ஈ) எள்கட்டி

5. தொழிலைச் செய்யும் கருத்தாவைக் குறிப்பது

அ) தொழிற்பெயர் ஆ) முதனிலைத் திரிந்த தொழிற்பெயர்

இ) முதனிலை தொழிற்பெயர் ஈ) வினையாலணையும் பெயர்

6. “மாலவன் குன்றம் போனாலென்ன ? வேலவன் குன்றமாவது எங்களுக்கு வேண்டும்” – மாலவன் குன்றமும் வேலவன் குன்றமும் குறிப்பவை முறையே –

அ) திருத்தணியும் திருப்பதியும் ஆ) திருப்பரங்குன்றமும் பழனியும்

இ) திருப்பதியும் திருத்தணியும் ஈ) திருப்பதியும் திருச்செந்தூரும்

7. கொடுக்கப்பட்ட அனைத்துச் சொற்களும் அமைந்த பொருத்தமான தொடரை தேர்க.
மலை, மழை, மேகம், ஆறு, ஏரி, குளம்

அ) மலைமீது மழைபெய்து ஆற்று வெள்ளம் ஊரின் வழியே பெருக்கெடுத்து ஓடியது.

ஆ) கருத்த மேகம் மலைமீது மழையைப் பொழிய ஆறு, ஏரி, குளம், அனைத்தும் நீரால் நிரம்பின.

இ) திரண்ட மேகங்கள் மலையில் மாரியாகி ஆறு, ஏரி குளங்களில் நிறைந்தன.

ஈ) மலைமீது மழைபொழிய ஏரி குளங்கள் நிறைந்து பின் கடலில் சென்று கலந்தது.

8. கருணையன் என்பவர் –

அ) வீரமாமுனிவர் ஆ) யோசேப்பு

இ) அருளப்பன் ஈ) சாந்தாசாகிப்

9. ‘எய்துவர் எய்தாப் பழி’ – இக்குறளடிக்குப் பொருந்தும் வாய்பாடு எது ?

அ) கூவிளம் தேமா மலர் ஆ) கூவிளம் புளிமா நாள்

இ) தேமா புளிமா காசு ஈ) புளிமா தேமா பிறப்பு

10. ஸ்டேட் வங்கியின் உரையாடு மென்பொருள் எது ?

அ) குலா ஆ) இலா இ) சீலா ஈ) துலா

enquiry@surabooks.com Ph:8124201000 / 8124301000

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.surabooks.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

www.surabooks.com



11. சோலையில் பூத்த மணமலர்களில் சுரும்புகள் மொய்த்துப் பண்பாடி மதுவுண்டன. இத்தொடரில் அடிக்கோடிட்ட சொற்களுக்குப் பொருத்தமான வேறு சொற்களை எழுதுக.

அ) பூஞ்சோலை – அரும்புகள் ஆ) மலை – எறும்புகள் – தேன்

இ) பூஞ்சோலையில் – வண்டுகள் – தேன் ஈ) கானகம் – வண்டுகள் – நீர்

**பாடலைப் படித்து பின்வரும் வினாக்களுக்கு (12, 13, 14, 15) விடை தருக.**

"நனந்தலை உலகம் வளைஇ நேமியொடு
வலம்புரி பொறித்த மாதாங்கு தடக்கை
நீர் செல, நிமிர்ந்த மாஅல் போல.
பாடுஇமிழ் பனிக்கடல் பருகி, வலன்ஏர்பு.
கோடு கொண்டு எழுந்த கொடுஞ் செலவு எழிலி
பெரும்பெயல் பொழிந்த சிறுபுன் மாலை''

12. இப்பாடல் இடம்பெற்ற நூல்

அ) முல்லைப்பாட்டு ஆ) மலைபடுகடாம்

இ) நற்றிணை ஈ) குறுந்தொகை

13. 'நனந்தலை உலகம்' – இத்தொடரின் பொருள்?

அ) சிறிய உலகம் ஆ) தலையாய உலகம்

இ) நனைந்த உலகம் ஈ) அகன்ற உலகம்

14. பாடலில் இடம்பெற்றுள்ள அடிஎதுகைச் சொற்கள்

அ) பெரும்பெயல், பொழிந்த ஆ) பாடுஇமிழ், பனிக்கடல்

இ) பாடுஇமிழ், கோடுகொண்டு ஈ) நீர்செல, நிமிர்ந்த

15. பாடலில் இடம் பெற்றுள்ள அளபெடை –

அ) தடக்கை ஆ) வளைஇ

இ) பெரும்பெயல் ஈ) கொடுஞ்செலவு

**பகுதி - II (மதிப்பெண்கள் : 18) பிரிவு - 1**

**குறிப்பு : எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் குறுகிய விடையளிக்கவும். வினா எண் 21–க்கு கட்டாயமாக விடையளிக்கவும்.** [4 × 2 = 8]

16. விடைக்கேற்ற வினா அமைக்க.

அ) தப்பாட்டம் நிகழ்த்தப்படும் சூழலுக்கேற்ப பல்வேறு ஆட்டக்கூறுகளைக் கொண்டுள்ளது.

ஆ) ஒயிலாட்டத்தில் தோலால் கட்டப்பட்ட குடம், தவில், சிங்கி, டோலக், தப்பு போன்ற இசைக்கருவிகள் பயன்படுத்தப்படுகின்றன.

17. "காய்மணி யாகு முன்னர்க் காய்ந்தெனக் காய்ந்தேன்'' உவமை உணர்த்தும் கருத்து யாது?

18. தமிழ்சொல் வளம் குறித்து கால்டுவெல் குறிப்பிடும் கருத்தை எழுதுக.

19. உயிர்கள் உருவாகி வளர ஏற்ற சூழல் பூமியில் எவை எவையெனப் பரிபாடல் வழி அறிந்தவற்றைக் குறிப்பிடுக.

20. "நமக்கு உயிர் காற்று
காற்றுக்கு வரம் மரம் – மரங்களை
வெட்டி எறியாமல் நட்டு வளர்ப்போம். – இதுபோன்ற 'உலகக் காற்று நாள்' விழிப்புணர்வுக்கான இரண்டு முழக்கத் தொடர்களை எழுதுக.

21. 'செயற்கை' எனத் தொடங்கும் திருக்குறளை எழுதுக.

**பிரிவு - 2**

**குறிப்பு : எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்.** [5 × 2 = 10]

22. குறள்வெண்பாவின் இலக்கணத்தை எழுதுக.

23. இருசொற்களையும் ஒரே தொடரில் அமைத்து எழுதுக.

அ) தொடு – தோடு ஆ) மலை – மாலை

24. தணிந்தது – பகுபத உறுப்பிலக்கணம் தருக.

25. புறந்திணைகளில் எதிரெதிர்த் திணைகளை அட்டவணைப்படுத்துக.

enquiry@surabooks.com Ph:8124201000 / 8124301000

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.surabooks.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

www.surabooks.com



26. குறிப்பைப் பயன்படுத்தி விடைதருக. **குறிப்பு** – எதிர்மறையான சொற்கள்
அ) அருகில் அமர்க ஆ) மீளாத் துயர்

27. கலைச்சொல் தருக. Homograph, Vowel

28. நாள்காட்டியில் ஞாயிற்றுக்கிழமை இருபதாம் நாள் எனில் அந்த வாரத்தில் புதன்கிழமையும் சனிக்கிழமையும் எந்த நாள்களில் வரும் என்பதனைத் தமிழெண்களில் எழுதுக.
ஞாயிற்றுக்கிழமை – 20 புதன்கிழமை – ---------- சனிக்கிழமை ----------

**பகுதி - III (மதிப்பெண்கள் : 18) பிரிவு - 1**

**குறிப்பு : எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்கவும்.** [2 × 3 = 6]

29. உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.
தற்போது வெளிவருகிற சில உயர்வகைத் திறன்பேசியின் ஒளிபடக் கருவி, செயற்கை நுண்ணறிவுத் தொழில்நுட்பத்தைக் கொண்டிருக்கிறது. கடவுச்சொல்லும் கைரேகையும் கொண்டு திறன்பேசியைத் திறப்பது பழமையானது. உரிமையாளரின் முகத்தை அடையாளம் கண்டு திறப்பது, இன்றைய தொழில்நுட்பம். செயற்கை நுண்ணறிவு, படம் எடுக்கும் காட்சியை அடையாளம் கண்டு அதற்கு ஏற்பத் தன்னைத் தகவமைத்துக் கொள்கிறது.
அ) திறன்பேசியைத் திறக்கும் பழைய முறைகள் எவை ?
ஆ) திறன்பேசியில் படம் எடுக்கும் காட்சியை அடையாளம் கண்டு செயற்கை நுண்ணறிவு எவ்வாறு செயல்படுகிறது ?
இ) உயர்வகைத் திறன்பேசிகளில் பயன்படுத்தப்படும் தொழில்நுட்பம் எது ?

30. சங்க இலக்கியங்கள் காட்டும் அறங்கள் இன்றைக்கும் தேவை யானவையே என்பதற்கு ஒரு எடுத்துக்காட்டு தந்து விளக்குக.

31. உங்களுடன் பயிலும் மாணவர் ஒருவர் பள்ளிப்படிப்பைப் பாதியில் நிறுத்தி வேலைக்குச் செல்ல விரும்புகிறார். அவரிடம் கல்வி கற்பதன் இன்றியமையாமை எவ்வகையில் எடுத்துரைப்பீர்கள் ?

**பிரிவு - 2**

**குறிப்பு : எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்கவும். வினா எண் 34–க்கு கட்டாயமாக விடையளிக்க வேண்டும்** [2 × 3 = 6]

32. கூத்தனைக் கூத்தன் ஆற்றுப்படுத்துதலைக் கூத்தராற்றுப்படை எவ்வாறு காட்டுகிறது ?

33. வைத்தியநாதபுரி முருகன், அணிந்திருக்கும் அணிகலன்களுடன் குழந்தையாகச் செங்கீரை ஆடிய நயத்தினை விளக்குக.

34. அடிபிறழாமல் எழுதுக.
“தென்னவ மகளே !” எனத் தொடங்கும் ‘அன்னை மொழியே’ பாடல். (அல்லது) “தூசும் துகிரும்’ எனத் தொடங்கும் சிலப்பதிகாரப் பாடல்.

**பிரிவு - 3**

**குறிப்பு : எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்கவும்.** [2 × 3 = 6]

35. தோட்டத்தில் மல்லிகைப்பூ பறித்த பூங்கொடி, வரும்வழியில் ஆடுமாடுகளுக்குத் தண்ணீர்த் தொட்டியில் குடிநீர் நிரப்பினாள். வீட்டினுள் வந்தவள் சுவர்க்கடிகாரத்தில் மணி பார்த்தாள். இப்பத்தியில் உள்ள தொகைச் சொற்களின் வகைகளைக் குறிப்பிட்டு, விரித்து எழுதுக.

36. அரியவற்றுள் எல்லாம் அரிதே பெரியாரைப்
பேணித் தமராக் கொளல் – அலகிட்டு வாய்பாடு தருக.

37. தீவக அணியை விளக்கி, மூவகை தீவக அணிகளையும் குறிப்பிடுக.

**பகுதி - IV (மதிப்பெண்கள் : 25)**

**குறிப்பு : அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.** [5 × 5 = 25]

38. அ) இறைவன், புலவர் இடைக்காடனார் குரலுக்குச் செவிசாய்த்த நிகழ்வை நயத்துடன் எழுதுக. **(அல்லது)**
ஆ) நதியின் பிழையன்று
நறும்புனலின்மை அன்றே
பதியின் பிழையன்று
பயந்த நம்மைப் புரந்தான்

enquiry@surabooks.com Ph:8124201000 / 8124301000

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

www.surabooks.com



# சுராவின் மாதிரி வினாத்தாள் - 8

## 10ஆம் வகுப்பு - தமிழ்

காால அளவு : 3.00 மணி நேரம் ] [ மொத்த மதிப்பெண்கள் : 100

**பகுதி - I (மதிப்பெண்கள் : 15)**

**குறிப்பு :** (i) அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.
(ii) கொடுக்கப்பட்ட நான்கு விடைகளில் ஏற்புடைய விடையினைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும். [15 × 1 = 15]

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. “கேட்டவர் மகிழப் பாடிய பாடல் இது’’ – தொடரில் இடம் பெற்றுள்ள தொழிற்பெயரும் வினையாலணையும் பெயரும் முறையே –
அ) பாடிய, கேட்டவர் ஆ) பாடல், பாடிய
இ) கேட்டவர், பாடிய ஈ) பாடல், கேட்டவர்

2. பாரத ஸ்டேட் வங்கியின் உரையாடு மென்பொருள் எது ?
அ) துலா ஆ) சீலா இ) குலா ஈ) இலா

3. மலர்கள் தரையும் நழுவும். எப்போது ?
அ) அள்ளி முகர்ந்தால் ஆ) தளரப் பிணைத்தால்
இ) இறுக்கி முடிச்சிட்டால் ஈ) காம்பு முறிந்தால்

4. சிலப்பதிகாரத்திலும் மணிமேகலையிலும் அமைந்த பாவினம்
அ) அகவற்பா ஆ) வெண்பா இ) வஞ்சிப்பா ஈ) கலிப்பா

5. ‘நாகப்பட்டினம்‘ என்ற ஊர்ப்பெயரின் மரூஉவைத் தேர்ந்தெடுக்க.
அ) நாகூர் ஆ) நாவலூர் இ) நாகை ஈ) நாகையூர்

6. “இங்கு நகரப் பேருந்து நிற்குமா ?’’ என்று வழிப்போக்கர் கேட்டது .............வினா. “அதோ, அங்கே நிற்கும்.’’ என்று மற்றொருவர் கூறியது ....... விடை.
அ) ஐயவினா, வினா எதிர் வினாதல் ஆ) அறிவினா, மறை விடை
இ) அறியாவினா, சுட்டு விடை ஈ) கொளல்வினா, இனமொழி விடை

7. காசிக்காண்டம் என்பது –
அ) காசி நகரத்தின் வரலாற்றைப் பாடும் நூல்
ஆ) காசி நகரத்தைக் குறிக்கும் மறுபெயர்
இ) காசி நகரத்தின் பெருமையைப் பாடும் நூல்ஈ)காசி நகரத்திற்கு வழிப்படுத்தும் நூல்

8. புதிரை விடுவிப்பதற்கான சொல்லைத் தேர்க.
**புதிர் :** நாலெழுத்தில் கண் சிமிட்டும் – கடையிரண்டில் நீந்திச் செல்லும்.
அ) நறுமணம் ஆ) புதுமை
இ) காற்று ஈ) விண்மீன்

9. சுதந்திர இந்தியாவின் மகத்தான சாதனையும் சவாலுமாக ஜெயகாந்தன் கருதுவது
அ) அரசின் நலத்திட்டங்களைச் செயல்படுத்துதல்
ஆ) பெற்ற சுதந்திரத்தைப் பேணிக்காத்தல்
இ) அறிவியல் முன்னேற்றம் ஈ) வெளிநாட்டு முதலீடுகள்

10. எதிர்மறையாக மாற்றுக. எழுதாக் கவிதை
அ) எழுதிய கவிதை ஆ) பாடிய கவிதை
இ) பேசிய கவிதை ஈ) கூறிய கவிதை

11. வேர்க்கடலை, மிளகாய் விதை, மாங்கொட்டை ஆகியவற்றைக் குறிக்கும் பயிர்வகை
அ) குலை வகை ஆ) மணி வகை
இ) கொழுந்து வகை ஈ) இலை வகை

enquiry@surabooks.com Ph:8124201000 / 8124301000

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

www.surabooks.com



**பாடலைப் படித்து பின்வரும் வினாக்களுக்கு (12, 13, 14, 15) விடை தருக.**

"நும்இல் போல நில்லாது புக்கு,
கிழவிர் போலக் கேளாது கெழீஇச்
சேட் புலம்பு அகல இனிய கூறி
பருஉக்குறை பொழிந்த நெய்க்கண் வேவையொடு
குரூஉக்கண் இறடிப் பொம்மல் பெறுகுவிர்

12. பாடல் இடம்பெற்ற நூலைத் தேர்க.
அ) இரட்டுற மொழிதல் ஆ) முல்லைப்பாட்டு
இ) மலைபடுகடாம் ஈ) நீதிவெண்பா

13. பாடலில் இடம்பெற்றுள்ள 'இறடிப் பொம்மல்' என்பதன் பொருளைத் தேர்ந்தெடுக்க.
அ) தினைச்சோறு ஆ) மாமிசப் பொரியல்
இ) நெய்ச்சோறு ஈ) கம்மங்கூழ்

14. செய்யுள் அடிகளில் இடம்பெற்றுள்ள அளபெடைச் சொல்லைத் தேர்ந்தெடுக்க.
அ) கேளாது ஆ) பெறுகுவிர்
இ) நில்லாது ஈ) கெழீஇ

15. பாடலிலிருந்த அடிமோனைச் சொற்களைத் தேர்க.
அ) நும்இல் –நில்லாது ஆ) பொழிந்த – பொம்மல்
இ) இறடி – பெறுகுவிர் ஈ) புலம்பு –அகல

**பகுதி - II (மதிப்பெண்கள் : 18)**

**பிரிவு - 1**

**எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும். வினா எண் 21–க்கு கட்டாயமாக விடையளிக்கவும்.** [4 × 2 = 8]

16. காலக்கழுதை கட்டெறும்பானதும் கவிஞர் செய்வது யாது?

17. வருங்காலத்தில் தேவையெனக் கருதுகின்ற செயற்கை நுண்ணறிவு பொதிந்த இரண்டு அறிவியல் கண்டுபிடிப்புகளைக் குறிப்பிடுக.

18. விடைக்கேற்ற வினாக்கள் அமைக்க.
அ) நூலானது அறம், பொருள், இன்பம், வீடு என்ற நான்கு பயனுக்காக இருத்தல் வேண்டும்.
ஆ) தமிழ், இந்திய இலக்கியங்களை மட்டுமன்றி, சோவியத், பிரெஞ்சு இலக்கியங்களையும் தானே படித்து உணர்ந்தவர் ஜெயகாந்தன்.

19. மெய்க்கீர்த்தி பாடப்படுவதன் நோக்கம் யாது?

20. 'நமக்கு உயிர் காற்று
காற்றுக்கு வரம் மரம் – மரங்களை
வெட்டி எறியாமல் நட்டு வளர்ப்போம்' – இதுபோன்று உலகக் காற்று நாள் விழிப்புணர்வுக்கான இரண்டு முழக்கத்தொடர்களை எழுதுக.

21. 'செயல்' என முடியும் திருக்குறளை எழுதுக.

**பிரிவு - 2**

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்.** [5 × 2 = 10]

22. சந்தக் கவிதையில் வந்த பிழைகளைத் திருத்திச் சரியாக எழுதுக.
"தேனிலே ஊறிய செந்தமிழின் – சுவை
தேரும் சிலப்பதி காறமதை
ஊனிலே எம்முயிர் உல்லலவும் – நிதம்
ஒதி யுனர்ந்தின் புருவோமே''

23. முயற்சி திருவினை ஆக்கும் முயற்றின்மை
இன்மை புகுத்தி விடும்.
– இக்குறட்பாவில் அமைந்துள்ள பொருள்கோளின் வகையை எழுதுக.

enquiry@surabooks.com Ph:8124201000 / 8124301000

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

www.surabooks.com



24. வல்லின ஒற்றை இட்டும் நீக்கியும் எழுதுக.
எல்லா பறவைகளுக்கும் காது உண்டு, செவி துளைகள் இறகுகளால் மூடி இருக்கும். மற்றப்படி பாலூட்டிகளில் உள்ளதுபோல் புறசெவிமடல் இருக்காது, காகத்திற்கு காது உண்டு, காதுக் கேட்கும்.
25. மலைந்து – பகுபத உறுப்பிலக்கணம் எழுதுக.
26. பொருத்தமான நிறுத்தற் குறியிடுக.
சேரர்களின் பட்டப் பெயர்களில் கொல்லி வெற்பன் மலையமான் போன்றவை குறிப்பிடத்தக்கவை கொல்லி மலையை வென்றவன் கொல்லி வெற்பன் எனவும் பிற மலைப் பகுதிகளை வென்றவர்கள் மலையமான் எனவும் பெயர் சூட்டிக் கொண்டனர் இதற்குச் சங்க இலக்கியத்தில் சான்றுகள் உள்ளன.
27. கலைச் சொற்கள் தருக. அ) Discussion ஆ) Document
28. 'வேங்கை' என்பதைத் தொடர் மொழியாகவும் பொதுமொழியாகவும் வேறுபடுத்திக் காட்டுக.

**பகுதி - III (மதிப்பெண்கள் : 18) பிரிவு - 1**

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்கவும்.** [2 × 3 = 6]

29. மொழிப்பெயர்ப்பின் பயன்கள் மூன்றை எழுதுக.
30. 'புளியங்கன்று ஆழமாக நடப்பட்டுள்ளது' இதுபோல் இளம் பயிர் வகை ஐந்தின் பெயர்களை தொடர்களில் அமைக்க.
31. உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடையளிக்க.
'சொற்பொழிவுகளைக் கேட்பதன் மூலமாகவும் நான் இலக்கிய அறிவு பெற்றேன். அப்போது அவர்கள் வெளியிடும் சிறந்த கருத்துகளை ஏடுகளில் குறித்து வைத்துக் கொள்வேன்' என்றார் ம.பொ.சி. ஒருவன் அறிவு விளக்கம் பெறுவதற்கு இரண்டு வழிகள் உள்ளன என்றும், அவை ஒன்று கல்வி, மற்றொன்று கேள்வி என்றும் எடுத்துக்கூறுகிறார். தான் முறையாக ஏட்டுக் கல்வி பெற இயலாமல் போனதால் ஏற்பட்ட இழப்பை ஈடு செய்யக் கேள்வி ஞானத்தைப் பெறுவதிலே மிகுந்த ஆர்வத்தைக் காட்டியதாகவும் ம.பொ.சி குறிப்பிடுகிறார். ம.பொ.சியின் அன்னையார் இளமையில் அவருக்குப் பயிற்றுவித்த பாக்கள் அவரது இலக்கியப் பயிற்சிக்கான தொடக்கப் பாடங்களாக அமைந்ததாகவும் ம.பொ.சி. கூறுகிறார்.
   1. சொற்பொழிவுகளைக் கேட்டதனால் ம.பொ.சி பெற்ற பயன்களை எழுதுக.
   2. ம.பொ.சியின் தொடக்கப் பாடங்களாக அமைந்தது எது ?
   3. ஒருவன் அறிவு விளக்கம் பெறுவதற்கான இரண்டு வழிகள் என்று ம.பொ.சி. குறிப்பிடுவன எவை ?

**பிரிவு - 2**

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும். வினா எண் 34–க்கு கட்டாயமாக விடையளிக்கவும்** [2 × 3 = 6]

32. மன்னன் இடைக்காடனார் என்ற புலவனுக்குச் சிறப்பு செய்தது ஏன் ? விளக்கம் தருக.
33. கூத்தனைக் கூத்தன் ஆற்றுப்படுத்துதலைக் கூத்தராற்றுப்படை எவ்வாறு காட்டுகிறது ?
34. அடிபிறழாமல் எழுதுக.
   அ) "வாளால் அறுத்துச்' – எனத் தொடங்கும் பெருமாள் திருமொழிப் பாடல்.
   ஆ) "நவமணி வடக்கயில்போல்'' எனத் தொடங்கும் தேம்பாவணிப் பாடல்

**பிரிவு - 3**

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்கவும்.** [2 × 3 = 6]

35. சுட்டுவிடை, மறைவிடை, நேர்விடை இவை எவ்வகை விடைகள் என்பதைக் குறிப்பிட்டு, எடுத்துக்காட்டுகள் தருக.
36. "நாள்தோறும் நாடி முறைசெய்யா மன்னவன்
நாள்தொறும் நாடு கெடும்'' – இக்குறட்பாவை அலகிட்டு வாய்பாடு தருக.
37. தீவக அணியை விளக்கி அதன் வகைகளை எழுதுக.

**பகுதி - IV (மதிப்பெண்கள் : 25)**

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.** [5 × 5 = 25]

38. அ) மனோன்மணீயம் சுந்தரனாரின் தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடலையும் பெருஞ்சித்திரனாரின் தமிழ் வாழ்த்தையும் ஒப்பிட்டு மேடைப் பேச்சு ஒன்றை உருவாக்குக.

**அல்லது**

enquiry@surabooks.com Ph:8124201000 / 8124301000

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

www.surabooks.com



ஆ) சிலப்பதிகார மருவூர்ப்பாக்க வணிக வீதிகளை இக்கால வணிக வளாகங்களோடும் அங்காடிகளோடும் ஒப்பிட்டு எழுதுக.

39. அ) வெள்ளத்தில் சிக்கிய குழந்தையைக் காப்பாற்றியதற்கு மாவட்ட ஆட்சியரிடம் பாராட்டு பெற்ற நண்பனை வாழ்த்தியும் பாராட்டியும் கடிதம் ஒன்று எழுதுக.

**அல்லது**

ஆ) பல்பொருள் அங்காடி ஒன்றில் வாங்கிய உணவுப்பொருள் குறிப்பிட்ட நாள் முடிவுபெற்றதாக இருந்தமைக்கு அந்த அங்காடி மீது நடவடிக்கை எடுக்குமாறு உணவுப் பொருள் பாதுகாப்பு ஆணையருக்குக் கடிதம் எழுதுக.

40. காட்சியை கண்டு கவினுற எழுதுக.



41. தமிழ்வேந்தன் என்பவரின் மகள் வான்மலர், அரசு உயர்நிலைப் பள்ளி, விருத்தாசலம், கடலூர் மாவட்டத்தில் 10 வகுப்பு முடித்திருக்கிறார். அதே ஊரில் உள்ள அரசு மேல்நிலைப் பள்ளியில் 11–ஆம் வகுப்பு சேர விரும்புகிறார். தேர்வர் தன்னை வான்மலராகக் கருதி, கொடுக்கப்பட்ட மேல்நிலை சேர்க்கை விண்ணப்பப் படிவத்தினை நிரப்புக.

42. அ) அருகிவரும் நிகழ்கலைகளை பாதுகாக்கவும் வளர்க்கவும் மென்மேலும் பரவலாக்கவும் நீங்கள் செய்ய விரும்பும் செயல்கள் ஐந்தைப் பட்டியலிடுக.

**அல்லது**

ஆ) மொழிபெயர்க்க :

1. If you talk to a man in a language he understands, that goes to his head. If you talk to him in his own language that goes to his heart. – Nelson Mandela
2. Education is what remains after on has forgotten what one has learned in School. – Albert Einstein
3. Tomorrow is often the busiest day of the week. – Spanish Proverb
4. It is during our darkest moments that we must focus to see the light. – Aristotle
5. Success is not final, failure is not fatal. It is the courage to continue that counts. – Winston Churchill.

## பகுதி - V (மதிப்பெண்கள் : 24)

**குறிப்பு : அனைத்து வினாக்களுக்கும் விரிவான விடையளிக்கவும்.** [3 × 8 = 24]

43. அ) வீட்டில் திண்ணை அமைத்த காரணம், விருந்தினர் பேணுதல், தமிழர் பண்பாட்டில் ஈகை, பசித்தவருக்கு உணவிடல்– இதுபோன்ற செயல்கள் அவை இன்றும் தொடர்கிறதா ? என்பதை குறித்து விரிவாக எழுதுக.

**அல்லது**

ஆ) சங்க இலக்கியங்களில் காணப்படும் நான்கு அறக்கருத்துகளைக் குறிப்பிட்டு, அவை இன்றும் தேவை என்பதை நிறுவுக.

44. அ) 'கற்கை நன்றே கற்கை நன்றே பிச்சை புகினும் கற்கை நன்றே' என்கிறது வெற்றிவேற்கை. மேரியிடமிருந்து பறிக்கப்பட்ட புத்தகம், அச்சிறுமியின் வாழ்க்கையில் கல்விச் சுடரை ஏற்றிய கதையைப் பற்றிய உங்களின் கருத்துகளை விவரித்து எழுதுக.

**அல்லது**

ஆ) அழகிரிசாமியின் 'ஒருவன் இருக்கிறான்' சிறுகதையில் மனிதத்தை வெளிப்படுத்தும் கதைமாந்தர் குறித்து எழுதுக.

45. அ) உங்கள் பகுதியில் நடைபெற்ற கலைத் திருவிழாவிற்குச் சென்று வந்த நிகழ்வைக் கட்டுரையாக்குக.

**அல்லது**

ஆ) குறிப்புகளைக் கொண்டு கட்டுரை எழுதித் தலைப்பிடுக. முன்னுரை – மழை வெள்ளம் – இயற்கை மாற்றம் – மழைநீர் சேகரிப்பு – மழைநீர் வடிகால் அமைப்பு – நமது கடமை – முடிவுரை.

◆◆◆

enquiry@surabooks.com Ph:8124201000 / 8124301000

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

www.surabooks.com



## ஒரு மதிப்பெண் விடைகள்

**உடனடித்தேர்வு ஜுலை – 2024**

1 – ஆ 2 – ஆ 3 – இ 4 – இ 5 – ஆ 6 – அ 7 – இ 8 – ஆ 9 – ஈ 10 – அ 11 – ஈ 12 – ஆ 13 – ஆ 14 – இ 15 – இ

**அரசு பொதுத் தேர்வு மார்ச் – 2024**

1 – ஈ 2 – ஆ 3 – ஈ 4 – ஆ 5 – இ 6 – இ 7 – இ 8 – அ 9 – இ 10 – அ 11 – ஆ 12 – ஈ 13 – இ 14 – அ 15 – ஆ

**உடனடித்தேர்வு ஜுலை – 2023**

1 – அ 2 – இ 3 – ஆ 4 – ஈ 5 – இ 6 – ஈ 7 – அ 8 – ஈ 9 – இ 10 – அ 11 – ஆ 12 – இ 13 – ஈ 14 – ஆ 15 – அ

**அரசு பொதுத் தேர்வு ஏப்ரல் – 2023**

1 – ஈ 2 – அ 3 – இ 4 – அ 5 – ஈ 6 – அ 7 – ஆ 8 – ஆ 9 – அ 10 – அ 11 – ஆ 12 – ஈ 13 – அ 14 – ஆ 15 – இ

**உடனடித்தேர்வு ஆகஸ்ட் – 2022**

1 – ஈ 2 – அ 3 – ஆ 4 – இ 5 – ஈ 6 – இ 7 – அ 8 – அ 9 – ஆ 10 – இ 11 – அ 12 – ஆ 13 – அ 14 – இ 15 – அ

**அரசு பொதுத்தேர்வு – மே–2022**

1 – ஆ 2 – ஆ 3 – அ 4 – ஈ 5 – ஆ 6 – இ 7 – ஈ 8 – அ 9 – ஆ 10 – ஈ 11 – ஈ 12 – இ 13 – அ 14 – ஆ 15 – இ

**அரசு துணைத்தேர்வு வினாத்தாள் – செப்டம்பர்–2021**

1 – இ 2 – இ 3 – ஈ 4 – அ 5 – ஆ 6 – இ 7 – ஆ 8 – இ 9 – ஈ 10 – ஆ 11 – அ 12 – இ 13 – அ 14 – ஆ 15 – இ

**மாதிரி வினாத்தாள் - (PTA - 1)**

1 – ஆ 2 – ஆ 3 – அ 4 – ஆ 5 – ஈ 6 – இ 7 – ஆ 8 – இ 9 – அ 10 – ஆ 11 – இ 12 – அ 13 – ஈ 14 – இ 15 – ஆ

**மாதிரி வினாத்தாள் – (PTA - 2)**

1 – ஈ 2 – ஈ 3 – ஆ 4 – அ 5 – ஈ 6 – ஆ 7 – ஈ 8 – இ 9 – ஆ 10 – இ 11 – ஆ 12 – ஆ 13 – ஈ 14 – அ 15 – இ

**மாதிரி வினாத்தாள் – (PTA - 3)**

1 – ஆ 2 – ஆ 3 – ஆ 4 – இ 5 – அ 6 – ஈ 7 – ஈ 8 – இ 9 – ஆ 10 – ஈ 11 – அ 12 – இ 13 – அ 14 – ஆ 15 – அ

**மாதிரி வினாத்தாள் - (PTA - 4)**

1 – அ 2 – ஈ 3 – ஆ 4 – அ 5 – இ 6 – ஈ 7 – இ 8 – ஈ 9 – இ 10 – ஆ 11 – ஈ 12 – அ 13 – ஆ 14 – இ 15 – ஆ

**மாதிரி வினாத்தாள் – (PTA - 5)**

1 – ஈ 2 – ஆ 3 – ஈ 4 – இ 5 – இ 6 அ–4 ஆ–3 இ–2 ஆ–1 7 – ஈ 8 – ஆ 9 – ஆ 10 – ஆ 11 – இ 12 – ஈ 13 – அ 14 – ஆ 15 – ஆ

**மாதிரி வினாத்தாள் – (PTA - 6)**

1 – அ 2 – இ 3 – ஆ 4 – ஈ 5 – அ 6 – ஆ 7 – அ 8 – ஈ 9 – அ 10 – ஆ 11 – ஆ 12 – இ 13 – அ 14 – ஆ 15 – இ

**சுராவின் மாதிரி வினாத்தாள் – 1**

1 – ஈ 2 – ஆ 3 – ஆ 4 – ஆ 5 – அ 6 – ஈ 7 – ஆ 8 – ஈ 9 – ஈ 10 – இ 11 – ஆ 12 – இ 13 – ஈ 14 – அ 15 – இ

**சுராவின் மாதிரி வினாத்தாள் – 2**

1 – ஆ 2 – இ 3 – இ 4 – ஆ 5 – ஆ 6 – ஆ 7 – ஆ 8 – ஆ 9 – அ 10 – ஈ 11 – இ 12 – ஆ 13 – இ 14 – அ 15 – அ

**சுராவின் மாதிரி வினாத்தாள்– 3**

1 – அ 2 – அ 3 – அ 4 – அ 5 – இ 6 – அ 7 – இ 8 – ஆ 9 – அ 10 – ஈ 11 – ஆ 12 – ஈ 13 – ஆ 14 – ஆ 15 – ஆ

**சுராவின் மாதிரி வினாத்தாள் – 4**

1 – ஈ 2 – அ 3 – இ 4 – அ 5 – இ 6 – ஆ 7 – இ 8 – அ 9 – ஆ 10 – ஈ 11 – ஈ 12 – ஆ 13 – இ 14 – ஈ 15 – அ

**சுராவின் மாதிரி வினாத்தாள் – 5**

1 – இ 2 – இ 3 – ஆ 4 – ஆ 5 – ஆ 6 – இ 7 – ஆ 8 – இ 9 – இ 10 – ஆ 11 – அ 12 – இ 13 – அ 14 – ஆ 15 – இ

**மாதிரி வினாத்தாள் – 6**

1 – ஆ 2 – அ 3 – இ 4 – ஆ 5 – அ 6 – ஈ 7 – ஆ 8 – ஆ 9 – இ 10 – ஈ 11 – ஆ 12 – ஆ 13 – ஈ 14 – இ 15 – அ

**மாதிரி வினாத்தாள் – 7**

1 – ஈ 2 – அ 3 – இ 4 – அ 5 – ஆ 6 – ஆ 7 – இ 8 – அ 9 – ஆ 10 – ஈ 11 – ஈ 12 – ஆ 13 – இ 14 – ஈ 15 – அ

**மாதிரி வினாத்தாள் – 8**

1 – ஈ 2 – ஈ 3 – ஆ 4 – அ 5 – இ 6 – இ 7 – இ 8 – ஈ 9 – ஆ 10 – அ 11 – ஆ 12 – இ 13 – அ 14 – ஈ 15 – ஆ

◆◆◆

www.surabooks.com

enquiry@surabooks.com Ph:8124201000 / 8124301000

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com